பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
26 02 2026 THURSDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இஸ்ரேல் தொழில்துறையினர் இந்தியாவில் முதலீடு செய்ய முன்வருமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

2. தமிழகம் உட்பட 10 மாநிலங்களிலிருந்து 37 மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

3. தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணைய குழுவினர் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

4. நீதித்துறையில் ஊழல் குறித்த பகுதி இடம்பெற்றிருந்த NCERT-யின் எட்டாம் வகுப்பு பாடப்புத்தகத்திற்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

5. அல்பேனியா சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sujeet Kalkal தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

இஸ்ரேல் தொழில்துறையினர் இந்தியாவில் முதலீடு செய்ய முன்வருமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக இஸ்ரேல் சென்றுள்ள அவர், ஜெருசலேமில் புதுமை கண்டுபிடிப்புகள் குறித்த கண்காட்சியை பார்வையிட்ட பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

சுகாதாரம், இணைய பாதுகாப்பு, நீர் மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் புதுமை கண்டுபிடிப்புகள் இந்த கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகம் உட்பட 10 மாநிலங்களிலிருந்து 37 மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய அடுத்த மாதம் 5ஆம் தேதி கடைசி நாளாகும். அதற்கு மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும், மனுக்களை விலக்கிக் கொள்ள 9ஆம் தேதி கடைசிநாளாகும்.

போட்டியிருக்கும் பட்சத்தில் அடுத்த மாதம் 16ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்.

மஹாராஷ்ட்ராவிலிருந்து 7

தமிழகத்திலிருந்து 6

மேற்குவங்கம் மற்றும் பீகாரிலிருந்து தலா 5

ஒடிசாவிலிருந்து 4

அஸ்ஸாமிலிருந்து 3

சத்திஷ்கர், தெல்ங்கானா, ஹரியானா மாநிலங்களிலிருந்து தலா 2

ஹிமாச்சலப்பிரதேசத்திலிருந்து ஒரு உறுப்பினரையும் தேர்ந்தெடுப்பதற்காக இந்த தேர்தல் நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar தலைமையிலான தேர்தல் ஆணையத்தின் குழுவினர் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் திமுக, அஇஅதிமுக, பிஜேபி, காங்கிரஸ் உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

இன்று பிற்பகல் காவல்துறை உயரதிகாரிகளுடனும் இக்குழுவினர் ஆலோசனை மேற்கொள்ளவுள்ளனார்.

நாளை, மாவட்ட ஆட்சியர்களுடன் இக்குழுவினர் ஆலோசனை மேற்கொள்ளவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

நாட்டின் வளர்ச்சியில் இளையோர் சக்தி முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

மும்பையில் சிறந்த தொழில் முனைவோருக்கான விருது வழங்கும் விழாவில கலந்து கொண்டு அவர் பேசினார்.

புதுமை கண்டுபிடிப்புகளில் இந்தியா முன்னணியில் திகழ்வதற்கு இளையோர் சக்தியே காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால், வேலைவாய்ப்புகள் பாதிக்கப்படும் என்ற கருத்தை அவர் நிராகரித்தார்.

இந்த தொழில்நுட்பத்தின் மூலம் கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக வாய்ப்புள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

>>>>>><<<<<<

இணையதள பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு சமூகவலைதள நிறுவனங்களுக்கு உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இணையதளங்களில் வெளியிடப்படும் பதிவுகளுக்கு சம்பந்தப்பட்ட சமூகவலைதள நிறுவனங்களே பொறுப்பேற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வீடியோ பதிவுகளில் பயன்படுத்தப்படும் தனிநபர் குறித்த காட்சிகளுக்கு சம்பந்தப்பட்டவர்களின் ஒப்புதல் பெற வேண்டியது அவசியம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் மரங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதனை கருத்தில் கொண்டு மரக்கன்றுகள் நடும் இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நாள்தோறும் மரக்கன்றுகள் நடும் இயக்கத்தில் தாம் பங்கேற்று வருவதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

விடுதலைப் போராட்ட வீரர், வீர் சாவர்கரின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதனையொட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், வீர் சாவர்கரின் வாழ்க்கை வரலாறு இன்றளவும் அனைவருக்கும் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

நீதித்துறையில் ஊழல் குறித்த பகுதி இடம்பெற்றிருந்த, NCERT-யின் எட்டாம் வகுப்பு பாடப்புத்தகத்திற்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

சம்பந்தப்பட்ட புத்தகங்கள் உடனடியாக பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்றும் டிஜிட்டல் வடிவிலான பகுதிகள் நீக்கப்பட வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, முழுஅளவில் விசாரணை நடத்தப்படும் என்றும் கூறிய நீதிபதிகள், NCERT இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்விச் செயலர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு விளக்கம் அளிக்கக் கோரி நோட்டீஸ் அனுப்பவும் உத்தரவிட்டனர்.

>>>>>><<<<<<

தில்லியில் மின்உற்பத்தி திறனை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அடுத்த 50 ஆண்டுகளுக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில், மின்உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

மின்சார வாகனங்களின் பயன்பாட்டிற்கு தில்லி அரசு ஊக்கமளித்து வருவதாகவும் திருமதி. ரேகா குப்தா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மேகாலயாவில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. Conrad Sangma கூறியுள்ளார்.

அம்மாநில சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த அவர், இக்குழுவினருக்கு 100 கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவிகள் வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

ஆண்களுக்கான சுயஉதவி குழுக்களை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திரு. Conrad Sangma தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சத்திஷ்கரில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில், 2 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பிஜப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த போது, இருதரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நேரிட்டதாக காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர் ஜிதேந்திர யாதவ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதில் நக்ஸலைட்டுகள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், அப்பகுதியிலிருந்து ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக டாக்டர் ஜிதேந்திர யாதவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

கனடா பிரதமர் திரு. Mark Carney, நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக நாளை மும்பை வருகிறார்.

கனடா பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் முதன்முறையாக அவர் இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மும்பையில் தொழில்துறையினரோடு இரண்டு நாட்கள் ஆலோசனை மேற்கொள்ளும் அவர், அடுத்த மாதம் 1ஆம் தேதி புதுதில்லி செல்கிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன், 2ஆம் தேதி கனடா பிரதமர் பேச்சு நடத்துகிறார்.

இருநாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விரிவாக பேச்சு நடத்தவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பின்னர், இந்தியா – கனடா தலைமைச் செயல் அதிகாரிகள் அமைப்பின் கூட்டத்தில் இரு தலைவர்களும் பங்கேற்கவுள்ளதாகவும் எமது செய்தியாளர் கூறுகிறார்.

>>>>>><<<<<<

நேபாளத்தில் அடுத்த மாதம் 5ஆம் தேதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதை அடுத்து, 7 நாட்களுக்கு மது விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு தொடங்குவதற்கு 72 மணி நேரத்திற்கு முன்னதாக, இந்தியாவை ஒட்டிய எல்லைப் பகுதி, மூடப்படும் என்றும் அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

அல்பேனியா சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sujeet Kalkal தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

செவித்திறன் குறைபாடு உடையவர்களுக்கான ஆசிய டிவென்டி டிவென்டி கிரிக்கெட் கோப்பையை இந்தியா வென்றுள்ளது.

கட்டாக்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வென்று இக்கோப்பையை கைப்பற்றியது.

>>>>>><<<<<<

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இன்று சென்னையில் நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - ஜிம்பாப்வேயை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

சிங்கப்பூர் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் ரெட்டி கண்ணபுரம் - ராதிகா சர்மா இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 18-21, 21-13, 21-10 என்ற செட்கணக்கில் மலேசியாவின் Chan Wen Tse - Low Han Chen இணையை வென்றது.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் 7-6, 6-3 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் Belle Thompson-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

நெதர்லாந்து சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Akhil Reddy Bobba இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-11, 21-9 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் Jarno Deters-ஐ வென்றார்.